**வவுனியா மாவட்டத்தின் 09 கமநல சேவை குழுக்கள் - 2024**

------------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** வவுனியா மாவட்டத்தின் கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் 09 இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** வவுனியா மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பான 09 கணக்காய்வு அறிக்கைகள் அனைத்திலும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது முந்தைய ஆண்டுக்குரிய வருமானம் ரூபா 4,654,758 ஆனது நிதியாண்டிற்குரிய வருமானமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டதனால், மீளாய்வாண்டிற்குரிய வருமான மிகை குறித்த தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இவ்வாறான கணக்கியல் தவறுகள் மீண்டும் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கணக்கு வைத்தலின் போது அட்டுறு அடிப்படையினை பேணுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 06 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது நிதியாண்டிற்குரிய வருமானம் ரூபா 598,562 ஆனது மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததால், மிகை குறித்த தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் நிதியாண்டில் உரிய கணக்கு வைத்தலினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மீளாய்வாண்டிற்குரிய அனைத்து வருமானங்களும் அட்டுறு முறையினைப் பின்பற்றி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் உரிய நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஏற்பட்டுள்ள பிழைகளை சீர்திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 08 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது நடைமுறைச் சொத்துகளின் பெறுமதி ரூபா. 1,156,789 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | குறித்த பெறுமதியினை திரண்டநிதியில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துகள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்துடன் உரிய மீதியானது நிதிக்கூற்றுக்களுடன் சரியாக இணங்குவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 03 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது ரூபா. 4,115,706 பெறுமதியுடைய கட்டடங்கள் மற்றும் ஆதனம் பொறி இயந்திரங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததால், மீளாய்வாண்டில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறித்த அளவிற்கு குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | சொத்துகளின் மதிப்பை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, திரண்ட நிதிக் கணக்கில் தேவையான திருத்தங்களைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துகள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்துடன் உரிய மீதியானது நிதிக்கூற்றுக்களுடன் சரியாக இணங்குவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | 02 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது நடைமுறைப் பொறுப்புகளின் பெறுமதி ரூபா 299,246 ஆனது உரியவாறு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாததனால், நடைமுறைப் பொறுப்புகளின் பெறுமதி குறித்த தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | பொறுப்புக்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் பெறப்பட்டு, தவணை முறையில் அவற்றினை செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். | பொறுப்புக்கள் சரியாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பிழைகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 09 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது கடந்த நிதியாண்டு காலப்பகுதிகளுக்குரிய ரூ. 2,766,784 பெறுமதியுடைய பசளை கையாளுகைச் செலவுகள் மீளப்பெறப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டிற்குரிய வருமானமாக அதனை வெளிப்படுத்தியதனால், மீளாய்வாண்டிற்குரிய மிகையானது குறித்த தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | அரச உரக்கூட்டுத்தாபனம் வழங்கும் மானிய மற்றும் காசுப்பசளைகளுக்கான உரக் கையாளுகை செலவுகள் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக கிடைக்கப் பெறுவதனால் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. | மீளளிப்பு செய்யப்பட்ட செலவுகளை வருமதிகளாக கணக்கில் வெளிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 02 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினால் மீளாய்வாண்டில் வசூலிக்கப்பட்ட 2023 ஆண்டுக்கான ஏக்கர் வரி நிலுவை ரூபா. 31,588 ஆனது நிதி செயலாற்றல் கூற்றில் நிதியாண்டுக்குரிய வருமானமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தமையினால் வருமான மிகை குறித்த தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குறித்த பெறுமதியினை எதிர்வரும் காலப்பகுதியில் திரண்டநிதியில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | வருமானத்தை அட்டுறு அடிப்படையில் நிதி செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தல் வேண்டும், மற்றும் இதற்கான அதிகாரப்பூர்வ கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஏ) | 02 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் கட்டடங்களின் பெறுமானத் தேய்வினை கணக்கிடும் போது, சொத்தின் கொள்முதல் பெறுமதியின் அடிப்படையில் அல்லாமல் குறைந்து செல் மீதி முறையின் அடிப்படையில் பெறுமானத் தேய்வினை பின்பற்றியமையினால் பெறுமானத் தேய்வுத் தொகையானது ரூபா. 234,715 இனால் குறைவாக கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு மீளாய்வாண்டிற்குரிய வருமான மிகை குறித்த தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | கட்டடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வானது இனிவரும் காலங்களில் உரிய முறையில் கணிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம் | சரியான கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் தேவையான பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்டு, கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஐ) | 03 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் நிலையான வைப்புக்குரிய வட்டி வருமானம் ரூபா. 41,197 மீளாய்வாண்டில் வருமானமாக காட்டப்படாததால், மிகை குறித்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது | எதிர்வரும் காலப்பகுதியில், வட்டி வருமானத்தை சரியான முறையில் கணக்கிட்டு, நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவோம். | உரிய காலப்பகுதியுடன் தொடர்புடைய வருமானங்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டு, அட்டுறு அடிப்படையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | கோவில்குளம் கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுவின் மீளாய்வாண்டில் ரூபா. 446,670 மதிப்புள்ள 03 வகையான வாடகை வருமானங்களை வருமானமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளாததால், நிதியாண்டிற்கான மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் குறித்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது | உழவியந்திரங்களுக்கான காப்புறுதி மற்றும் வருமான வரி தொடர்பான ஆவணங்கள் வழங்க தவறியதனால் வாடகையை வசூலிக்க முடியவில்லை. குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ள வேண்டி இருப்பதனால் அத் தொகைகள் வருமதியாக பதிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | வாடகை வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், மேலும் சரியான மீதியினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்குரிய வருமதிகளின் மீதி ரூ. 10,119,075 மற்றும் 05 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் சென்மதி மீதிகளான ரூபா. 4,450,717 என்றவாறு காட்டப்பட்டிருந்த போதிலும், குறித்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய கணக்குகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் அழிவடைந்துள்ளமையினால் இக்கணக்குகளை பதிவழிப்பு செய்யும் பொருட்டு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அறியத்தரப்பட்டுள்ளது | கணக்குகளில் காட்டப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு போதுமான எழுத்திலான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், அல்லது அதிகாரப்பூர்வ விசாரணைக்கு பின்னர் குறித்த மீதிகளுக்கு உரியவாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா. 267,345 பெறுமதியுடைய சொத்துகளின் இருக்கும் தன்மையினை கணக்காய்வின்போது உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | இது தொடர்பாக திணைக்களத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு உதவி ஆணையாளரின் அனுமதியுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வின்போது கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சொத்துகளின் இருக்கும் தன்மையினை உறுதிப்படுத்துவது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். குறித்த சொத்துகள் காணப்படாவிடின், தேவையான விசாரணைகளினை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பம்பைமடு கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுவின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா. 8,754,026 பெறுமதியுடைய 02 நிலையான வைப்புகளுக்கான சான்றிதழ்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வங்கிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, புதிய சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வின்போது நிலையான வைப்புச் சான்றிதழ்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | | |
| **(i)** | பிரிவு 25(1) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்குரிய மேற்பார்வை குழு நியமிக்கப்பட்டிருக்கவில் லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் அபிவிருத்தி சபைக்குரிய மேற்பார்வை குழு நியமிக்கப்படவில்லை | சட்டத்தின் உரிய பிரிவின் பிரகாரம் மேற்பார்வை குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும். |
| **(ii)** | பிரிவு 44(1) | சட்டத்தின் பிரகாரம், 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினதும் ஆண்டுக் கணக்குகள் உள்ளக கணக்காய்வு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவி ல்லை. | இனிவரும் காலங்களில் கணக்குகள் உரிய முறையில் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் உரிய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் 09 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா. 11,481,157 தொகையானது மொத்த நிகர மிகையொன்றாக காணப்படுவதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா. 3,260,796 தொகையாக காணப்பட்டது. அதன்படி நிதிப் பெறுபேறுகளில் ரூபா 8,220,361 இற்கான அதிகரிப்பொன்று ஏற்பட்டுள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினால் குளங்களின் எல்லைகளை அடையாளப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,459,160 பெறுமதியுடைய 2029 எண்ணிக்கையான எல்லைக்கற்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் காலத்தில் இதுவரை எல்லையிடப்படாத குளங்களை அளவீடு செய்வதற்கும் எல்லைக்கற்களை இடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எல்லைக் கற்களை உரிய நோக்கத்திற்கு திறம்படவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மடுக்கந்தை கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுவினால் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2014/2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய உர மானிய மிகைக்கொடுப்பனவான ரூபா. 61,600 தொகையானது அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆறு வருடங்களுக்கு மேலாகியும் குறித்த தொகையினை உரிய நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் குறித்த தொகையினை உரிய நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வசூலிக்கப்பட்ட பணத்தை உரிய நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | செட்டிகுளம் கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுவிற்கு உரித்துடைய கமநல உணவகத்தில் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத காலப்பகுதியிலிருந்து நாளதுவரை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய தரப்பினர்களுடன் முறையான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவில்லை. | 2025ஆம் ஆண்டில் உணவகத்தினை நடாத்துபவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உரிய தரப்பினர்களுடன் அதிகாரப்பூர்வ எழுத்திலான ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 02 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களில் உள்ள ரூபா 719,791 பெறுமதியான காலாவதியான இருப்புக்கள் தொடர்பில் கடந்த 10 தொடக்கம் 16 வருடங்களுக்கு மேல் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது களஞ்சியத்தில் தேக்கிவைக்கப்பட்டுள்ளது. | மேற்படி இருப்புக்கள் தொடர்பாக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது, மேலும் அவற்றை கணக்கில் இருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | காலாவதியான இருப்புக்கள் தொடர்பில் அதிகாரப்பூர்வ அனுமதியுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 02 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினால் ரூபா 355,710 செலவில் தயாரிக்கப்பட்ட சேதன உர இருப்பானது பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் நிலையத்தில் பயன்பாடற்ற நிலையில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பான நடவடிக்கைகள் உதவி ஆணையாளரின் அனுமதிக்கமைவாக மேற்கொள்ளப்படும். | சேதன உர இருப்புக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மடுக்கந்தை கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுவினால் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் நோக்கில் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ள ரூபா. 285,000 தொகையானது குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது எட்டு வருடங்களுக்கு மேலாகியும் நிலையத்திலேயே பேணப்பட்டு வருகின்றது. | தேவையான தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், உதவி ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறித்துரைக்கப்பட்ட பணியினை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கோவில்குளம் கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுவின் நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மீளாய்வாண்டு மற்றும் கடந்தாண்டு காலப்பகுதியில் நிலையத்தில் ஏற்பட்ட விதை நெல் மற்றும் கன்று இருப்புக்களில் ஏற்பட்ட குறைவு காரணமாக நிலையத்திற்கு ரூபா. 2,131,815 இழப்பு ஏற்பட்டது என்பது கண்காணிக்கப்பட்டது. | நிலையத்திற்கு ஏற்பட்ட நட்டங்கள் ரூபா 2,131,815 தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் உதவி ஆணையாளருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரப்பூர்வ விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம், அதற்கு பொறுப்பாளர்களை இனங்கண்டு உரிய நட்டங்களை மீள அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களில் உள்ள 61 உழவு இயந்திரங்கள், 15 உழவு இயந்திர பெட்டிகள் மற்றும் 6 வகையான சொத்துக்களின் 45 பொருட்கள் 8 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில், அவற்றை பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு, வேறு குழுவிற்கு மாற்றுவதற்கு அல்லது முறையாக அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நிதியாண்டு காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 172,752,795 பெறுமதியான 805,117 கிலோ விதை நெல் மற்றும் 10,450 கிலோ இரசாயன உரக் கொள்வனவு தொடர்பில் உரிய பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. | எதிர்வரும் காலத்தில் பெறுகைகளை மேற்கொள்வதற்குரிய நடைமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அனைத்து பெறுகைகளும் பெறுகை வழிகாட்டலின் நடைமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்படல் வேண்டும், மற்றும் அதனைப் பின்பற்றாத தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக, 09 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது 52 வருமதியாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 8,875,545 தொகையினை கடந்த 02 தொடக்கம் 24 வருடங்கள் வரை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் குறித்த தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய காலப்பகுதியில் வருமதிகள் தொடர்பிலான அறவீடுகளை மேற்கொள்ளாத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் குறித்த வருமதிகளின் அறவீட்டு நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2024 டிசெம்பர் 31 இல் உள்ளவாறாக, 07 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது 28 சென்மதியாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 7,805,739 தொகையினை கடந்த 02 தொடக்கம் 14 ஆண்டுவரை செலுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் குறித்த நிலுவைகள் தொடர்பில் உரியவாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சென்மதிகளது மீதிகளை அதிகாரப்பூர்வமான முறையில் உறுதிப்படுத்துவதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட தொகைகளை உடனடியாக செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இற்கமைவாக, 09 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினது செயற்பாடுகளுக்குரிய உள்ளக கணக்காய்வுப் பரிசோதனைகள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப்படவில்லை என்பது கண்காணிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்திற்கு அமைவாக கமநல சேவைகள் நிலையங்களினது செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். | நிதிப்பிரமாணத்திற்கு அமைவாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கமநல வங்கியின் சுற்றறிக்கை 04/2012 இற்கு அமைவாக 08 கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களினால் வழங்கப்பட்ட கடன் பணத்தை 06 மாத காலத்திற்குள் அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் 141 பயனாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 5,184,919 பெறுமதியுடைய கடன்தொகை 02 தொடக்கம் 12 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தொகையில் ரூபா 511,502 ஆனது அறவிடப்பட்டுள்ளது. மேலும் ரூபா 4,673,417 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதியில் நிலுவையில் உள்ள கடன்களது அறவீடுகளை மேற்கொள்ளாத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் நிலுவை கடன்களை உடனடியாக அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |